[5th November 1966

Messrs. Southern Asbestos Cement, Ltd., has obtained a licence to set up a unit near Arkonam to produce the same materials to a capacity of 35,000 tonnes. Another firm, viz.,

Messrs. Lloyds Insulations (Madras) has been granted a letter of intent to set up a unit in Madras to produce annually 800 tonnes of asbestos moulded thermal insulation articles and 600 tonnes of asbestos yarn, packings, cloth and tapes.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ராஜ்யத்தினுடைய தேவை எவ்வளவு ? தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் இருக்கிறதா ? அல்லது உற்பத்தி செய்யப்படும் ஆஸ்பெஸ்டாஸ் எல்லாவற்றையும் சென்ட்ரல் பூல் ஆக வைத்து எல்லா ராஜ்யங்களுக்கும் வினியோகிக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவாக எல்லா ராஜ்யங்களுக்கும் வினியோகிக்கப்படுகிறது. அந்தந்த ராஜ்யத்திற்கென்று தனியாகக் கிடையாது.

Vanaspathy Industry

* 436 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start a Vanaspathy Industry on co-operative basis in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : சார், இம்மாதிரி சர்க்காரிலே ஒரு உத்தேசம் இருந்து பின்னாலே அது கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுவும் இல்லை.

திரு. மு. சண்முகம் : சார், விழுப்புரத்தில் சுமார் 45 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் வனஸ்பதி தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது. 7-8 ஆண்டுகளாக துவக்கப்படத் தகுதியுள்ளதாக இருந்தும் துவக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தும், நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையாவது செய்யவேண்டும் என்று சொல்லியும் இது வரையில் நடைபெறவில்லை. இந்தத் தொழிற்சாலை நடைபெறுமானால் அந்த வட்டாரத்தில் உள்ள மணிலா வியாபாரிகளுக்கு பாதகம் ஏற்படும் என்ற புகாரை அவர்கள் அரசாங்கத்திற்குச் செய்து கொண்டிருக்கிறார்களா ? இந்தத் தொழிற்சாலையை கூட்டுறவு அடிப்படையில் அரசாங்கம் ஏன் எடுத்து நடத்துவதற்கு முன்வரக்கூடாது ? இனியாகிலும் அந்த ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விழுப்புரத்தில் உள்ள தொழிற்சாலையை அதனுடைய முதலாளிகள், உரிமையாளர்கள், போதிய பண வசதி இல்லாத காரணத்தினால் நடத்த முடியவில்லை

அதற்குப் பிறகு சில வசதிகளை நாம் செய்து கொடுத்ததன் பயனாக மீண்டும் துவக்கினார்கள். எனக்கு இருக்கிற தகவல் அது சில மாதம் ஓடிவிட்டு மீண்டும் நின்று விட்டது என்பதாகும். அதற்குக் காரணம் மணிலாவின் விலை தாறுமாறாக ஏறிக்கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் அதை வாங்கி ஸ்டாக் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றும், அதனால் ஓட்டமுடியவில்லை என்றும் தெரிகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, வனஸ்பதித் தொழிற்சாலை நடத்துவதற்கான மூலப் பொருளாக இருக்கிற வேர்கடலை நமது மாநிலத்தில் நிறைய இருக்கிறது. வேறு மாநிலங்களில் உள்ள வனஸ்பதி தொழிற்சாலைக்கு வேண்டிய வேர்கடலை கூட இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. பிற நாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்படுகிறது. மூலப் பொருள் இங்கேயே கிடைக்கிற நிலையில், பொருளாதார வசதி, நிர்வாகத் திறமை யின்மை காரணமாகத் தொழிற்சாலை நின்று விட்டதாகத் தெரிவித்தார்கள். கூட்டுறவுத் துறையில் அல்லது அரசாங்கத் துறையில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்படுமானால் இதைச் செம்மையாக நடத்த வழிவகை ஏற்படாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்னுடைய கருத்து வனஸ்பதி தொழிற்சாலையை சர்க்கார் நடத்தக் கூடாது என்பது ஏனென்றால் மணிலாவின் விலை இன்டர்நேஷனல் மார்க்கெட் ப்ரைஸைப் பொறுத்து இருக்கிறது. விலை அதிகமாகவும், குறைவாகவும் போகக் கூடிய பொருளாக இருக்கிறது. அப்போதைக்கப்போது கண்காணித்து மணிலாவை வாங்கி தொழிற்சாலையை அந்தத் துறைகளில் நடத்த முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கூட்டுறவுத் துறையிலோ அல்லது சர்க்கார் துறையிலோ நடத்துவது நஷ்டத்தில் தான் கொண்டுவிடும்.

Banana Package Scheme

* 437 *Q.*—Sri V. S. S. Mani : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Special District Agricultural Officers have been appointed under the Banana Package Schemes;

(*b*) if so, their functions; and

(*c*) whether there is any proposal to distribute the agricultural loans under the Package Scheme through Special District Agricultural Officers instead of through Co-operative Societies?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இந்த தீவிர திட்டத்தின் கீழ், மாவட்ட வேளாண்மைச் சிறப்பு அதிகாரி ஒவ்வொருவரும், ஒவ்வோர் ஆண்டும், 4,000 ஏக்கர் வாழை பயிரிடுவதற்கு வகை செய்யவேண்டும். அதற்காக அவர் கீழ்க்கண்ட தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வார் :—

(1) நல்ல, நோய் பீடித்திராத தரமான வாழைக்கன்றுகளை வழங்குதல்.